

ஆலந்தூர் முன்னாள் எம்.எல்.ஏ. மிசா ம.ஆபிரகாம் அவர்களின் 38வது நினைவு நாளை முன்னிட்டு அவரது இல்லத்தில் உள்ள திருவுருவப் படத்திற்கும், சிலைக்கும் அமைச்சர் தா.மோ.அன்பரசன், கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி ஆகியோர் ஆகியோர் மாலை மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செய்தனர். உடன் பகுதி செயலாளர்கள் பி.குணாளன், என்.சந்திரன், பொதுக் குழு உறுப்பினர்கள் எம்.எஸ்.கே.இப்ராகிம், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் கோல்டு டி.பிரகாஷ், மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.

### ''நலம் காக்கும் ஸ்டாலின்'' திட்டத்தில்

# ஏழை - எளிய மக்கள் அதிக அளவில் பயனடைகின்றனர் என்ற தரவு மகிழ்ச்சி அளிக்கிறது!

## வலைதளப் பதிவில் – முதல்வர் மு.க.ஸ்டாலின் பெருமிதம்!

சென்னை, டிச.3–

“நலம் காக்கும் ஸ்டாலின்” திட்டத்தின் செயல்பாடுகள் குறித்து, முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், நேற்று விரிவான ஆய்வு மேற்கொண்டார்.

அதனையொட்டி முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள வலைதளப் பதிவில், ''நலம் காக்கும் ஸ்டாலின்'' திட்டத்தில் ஏழை, எளிய மக்கள் அதிகளவில் பயனடைந்து வருகின்றனர் என்ற தவு மகிழ்ச்சி அளிக்கிறது!'' என்று பெருமிதத்துடன் குறிப்பிட்டுள்ளார்.

**''நலம் காக்கும் ஸ்டாலின்'' திட்டத்தின் செயல்பாடுகள் குறித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு :–**

**கடந்த ஆகஸ்ட் 2–ஆம் நாள் தொடங்கப்பட்ட நலம் காக்கும் ஸ்டாலின் திட்டத்தில் இதுவரை,**

**நடத்தப்பட்ட முகாம்கள் – 632**

**பயன்பெற்றவர்கள் – 9,86,732**

**மருந்து பெற்றவர்கள் – 5,65,924**

**இதில்,**

**தூய்மைப் பணியாளர்கள் – 65,363**

**மாற்றுத் திறனாளிகள் – 39,475**

**இப்படி, ஏழை – எளிய மக்கள் அதிகளவில் பயனடைந்து வருகின்றனர் என்ற தரவு மகிழ்ச்சி அளிக்கிறது!**

**புற்றுநோய், இருதயநோய், காசநோய் எனப் பலருக்கும் தொடக்க நிலையிலேயே நோய்கள் கண்டறியப்பட்டு, அவர்களது மேல் சிகிச்சையும் FOLLOWUP செய்யப்படுவதை இத்திட்டத்தின் முக்கிய வெற்றியாகப் பார்க்கிறேன்.**

**அடுத்தடுத்து நடைபெறவுள்ள முகாம்கள் மேலும் சிறப்பாக அமைந்திட, நீங்கள் சொன்ன கருத்துகளை அதிகாரிகளுக்கு உத்தரவுகளாக வழங்கியிருக்கிறேன்.**

இவ்வாறு அப்பதிவில் – முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறுப்பிட்டுள்ளார்.

### முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்தநாளையொட்டி

# “அன்னம் தரும் அமுதகரம்” 286 வது நாள்!

## எழும்பூர் தெற்கு பகுதியில் – அமைச்சர் பி.கே.சேகர்பாபு உணவு வழங்கினார்!

*சென்னை, நவ.3-*

*முதலமைச்சர் அவர்களின் 72வது பிறந்த நாளை முன்னிட்டு சென்னை கிழக்கு மாவட்ட திமுக சார்பில், 2025 பிப்ரவரி 20ஆம் தேதி முதல், 2026 பிப்ரவரி 19ஆம் தேதி வரையிலான 365 நாட்களும், நாள் ஒன்றுக்கு 1000 நபர்களுக்கு காலை உணவு வழங்கும் சிறப்புமிகு “அன்னம் தரும் அமுதக்கரங்கள்” மாபெரும் திட்டத்தின் 286 ஆம் நாளான - கழகத்தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் இனிய பிறந்த நாளை முன்னிட்டு நேற்று (02.12.2025), எழும்பூர் தெற்கு பகுதி: 1) வட்டம் 61, குழந்தைகள் நல மருத்துவமனை, தமிழ் சாலை, எழும்பூர். 2) வட்டம் 61 அ, டிரான்ஸ்போர்ட் லைன், புதுப்பேட்டை, சென்னை ஆகிய பகுதிகளில் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு தமிழ்நாட்டு நலன்களையும், எதிர்காலத்தையும் யாருக்காவும், எதற்காகவும் விட்டுத்தரமாட்டோம். தமிழ்நாட்டின் உரிமைகளுக்காக ஒன்றுபட்டு போராடுவோம். தமிழ்நாடு போராடும், தமிழ்நாடு வெல்லும் - இதுதான் ஒரே இலக்கு!” என்ற உறுதிமொழியை ஏற்று பொதுமக்களுக்கு காலை உணவு வழங்கினார்*



*இந்நிகழ்ச்சியில் பெருநகர சென்னை மேயர் பிரியா ராஜன், வி.சுதாகர், சொ.வேலு, கோ.ஏகப்பன், கே.எஸ்.ரவிச்சந்திரன், தமிழன்பிரசன்னா, புனித வதி எத்திராசன், கே.எஸ்.எம்.நாதன், கோ.மணி, ஜி.தாமோதரன், பி.எம்.யாழினி, ராஜேஸ்வரிஸ்ரீதர், பரிதிஇளம்சுருதி, எழும்பூர் தெற்கு/வடக்கு வட்ட கழக செயலாளர்கள்: வி.விஜயகுமார், ஆர்.பாபு, டால்பின் எஸ்.அரிகிருஷ்ணன், இ.மொய்தீன், வான்மதி கதிரவன், எல்.சுந்தர்ரா ஜன், தி.தயாளன், வி.அபாய், சு.மனோகர், ந.பாலு, ஆர்.எம்.ரங்கநாதன், சி.சேகர், ஒருங்கிணைப்பாளர்கள்: சொ.வேலு, S.முரளி, பெரம்பூர் R.ராஜன், K.R.அபரஞ்சி, அசோக் ஜெயின், P.விஜயகுமார், ம.அசோக்குமார், L.சம்பத்குமார், க.பா.பிரதீப்குமார் மற்றும் கழக நிர்வாகிகள் முன்னோடிகள் கலந்து கொண்டனர்.*

### திருப்பெரும்புதூர் பிள்ளைப்பாக்கம் சிப்காட்டில் ரூ.200 கோடி முதலீட்டில் அமைக்கப்பட்டுள்ள

# பிக்டெக் தொழிற்சாலையைத் திறந்து வைக்க நாளை வருகை தரும் முதல்வருக்கு உற்சாக வரவேற்பு!

## அமைச்சர் தா.மோ.அன்பரசன் வேண்டுகோள்!

*திருப்பெரும்புதூர், டிச.3-*

*திருப்பெரும்புதூர் பிள்ளைப்பாக்கம் சிப்காட்டில் ரூ.200 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள பிக்டெக் தொழிற்சாலையை திறந்து வைக்க நாளை (4-ஆம் தேதி) காலை பிள்ளைப்பாக்கத்திற்கு வருகை தரும் தமிழ்நாடு முதல்வர் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்குதிருப்பெரும்புதூர் ஊராட்சி ஒன்றிய அலுவலகம் எதிரில் காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம் முழுவதும் இருந்து கழகத்தினர் அலைகடலென திரண்டு வந்து உற்சாக வரவேற்பு அளிக்க வேண்டும் என்று மாவட்டச் செயலாளர் - அமைச்சர் தா.மோ.அன்பரசன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.*



*இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு:-*

*காஞ்சிபுரம் மாவட்டம் திருப்பெரும்புதூர் வட்டம் பிள்ளைப்பாக்கம் சிப்காட்டில் ரூ.200 கோடி மதிப்பீட்டில் பிக்டெக் என்ற தொழிற்சாலை அமைந்துள்ளது.*

*இப்புதிய தொழிற்சாலை திறப்பு விழா நாளை காலை 9.30 மணியளவில் பிள்ளைப்பாக்கத்தில் நடைபெறுகிறது.*

*தமிழ்நாடு முதலமைச்சர், தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேரில் வருகை தந்து இப்புதிய தொழிற்சாலையை திறந்து வைக்கிறார்.*

*இத்தொழிற்சாலையை திறந்து வைக்க வருகை தரும் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் திருப்பெரும்புதூர் ஊராட்சி ஒன்றிய அலுவலகம் எதிரில் கழகத்தினர் திரண்டு நின்று உற்சாக வரவேற்பு அளிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.*

*இந்த வரவேற்பில் காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்தில் உள்ள மாவட்ட - மாநகர - பகுதி - ஒன்றிய - நகர - பேரூர் கழக செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு - பொதுக்குழு உறுப்பினர்கள், கழக அணிகளின் நிர்வாகிகள், கழக செயல் வீரர்கள் உள்ளிட்ட அனைவரும் பல்லாயிரக்கணக்கில் அணிதிரண்டு வந்து பங்கேற்க வேண்டும் என்று மாவட்டத்தில் உள்ள கழகத்தினர் அனைவரையும் அன்புடன் அழைக்கிறேன்.*

*சரித்திர சாதனை படைத்து வரும் நம்முடைய ஒப்பற்ற தலைவர் முதல்வர் அவர்களுக்கு உற்சாக வரவேற்பு அளிப்பது ‘நமது கடமை’, ‘நமது உரிமை’ என்ற அந்த உணர்வோடு மாவட்டம் முழுவதிலும் இருந்து கழகத்தினர் அலைகடலென திரண்டு வந்து பங்கேற்க வேண்டும் என்று இருகரம்கூப்பி அழைக்கிறேன்.*

*இவ்வாறு அவர் அறிக்கையில் கூறியுள்ளார்.*




தி.மு.கழக வர்த்தக அணி நிர்வாகிகள் மற்றும் மாவட்ட மாநகர அமைப்பாளர்கள் தலைவர்கள் கூட்டம் கோயம்புத்தூர் கானப்பட்டி ரோட்டில் உள்ள ஜோன் கனெக்ட் ஹோட்டலில் நடைபெற்றது. கூட்டத்தில் மாநில மாணவர் அணி செயலாளர் ராஜீவ் காந்தி சிறப்புரை ஆற்றினார். மாநில செயலாளர் கவிஞர் காசி முத்துமாணிக்கம் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் தொண்டாமுத்தூர் ரவி, துரை செந்தமிழ் செல்வன், முத்து செல்வி, கிருஷ்ணகிரி சீனிவாசன், திண்டுக்கல் ஜெயன், அசோக் பாண்டியன் மாவட்ட அமைப்பாளர்கள் கலந்து கொண்டனர். கோவை மாநகர் மாவட்ட வர்த்தகர் அணி அமைப்பாளர் பி.மாரி செல்வன், கோவை வடக்கு மாவட்ட அமைப்பாளர் வேலுச்சாமி நன்றி கூறினர்.

### வேலூர் கோட்டையை

# யுனெஸ்கோ நினைவுச் சின்னமாக அறிவிக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

## மக்களவையில் கழக உறுப்பினர் டி.எம்.கதிர் ஆனந்த் கேள்வி!

*புதுடெல்லி, டிச.3-*

*வரலாற்றுச் சிறப்புமிக்க வேலூர் கோட்டையை யுனெஸ்கோ உலக பாரம்பரிய நினைவுச்சின்னமாக அறிவிக்க ஒன்றிய அரசு நடவடிக்கை எடுக்குமா? என்று மக்களவையில் வேலூர் நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம்.கதிர் ஆனந்த் கேள்வி எழுப்பினார்.*

*அவரது கேள்விகள் வருமாறு:-*

*தமிழ்நாட்டில் வேலூர் மக்களவைத் தொகுதியில் உள்ள தொல்பொருள் நினைவுச் சின்னங்களைப் பாதுகாக்க அரசாங்கத்திடம் ஏதேனும் திட்டங்கள் உள்ளதா, அப்படியானால், அதன் விவரங்கள் யாவை?*



*வேலூர் மக்களவைத் தொகுதியில் உள்ள மத்தியப் பாதுகாக்கப்பட்ட நினைவுச் சின்னங்களுக்கு போதுமான நிதி வழங்க எடுக்கப்பட்ட / எடுக்கப்படும் நடவடிக்கைகள் பற்றிய விவரங்கள் யாவை?*

*வேலூர் கோட்டையை யுனெஸ்கோ உலக பாரம்பரிய நினைவுச்சின்னமாக அறிவிக்க ஒன்றிய அரசு ஏதேனும் நடவடிக்கைகள் எடுத்துள்ளதா? அப்படியானால், அதன் விவரங்கள் தருக?*

*நாட்டில் உள்ள மத்தியப் பாதுகாக்கப்பட்ட நினைவுச் சின்னங்களை பாதுகாப்பதற்கு பொதுதனியார் கூட்டாண்மையுடன் அரசு சாரா நிறுவனங்கள் (தன்னார்வ தொண்டு நிறுவனங்கள்) மற்றும் கலாச்சார ஆராய்ச்சி அமைப்புகளை ஈடுபடுத்துவதற்கு ஒன்றிய அரசிடம் ஏதேனும் திட்டம் உள்ளதா?*

*மேற்காணும் கேள்விகளுக்கு ஒன்றிய அரசின் கலாச்சார மற்றும் சுற்றுலா அமைச்சர் கஜேந்திர சிங் ஷேகாவத் எழுத்து பூர்வமாக கூறிய பதில் விவரம் வருமாறு:-*

*வேலூர் மக்களவைத் தொகுதியில் இந்திய தொல்பொருள் ஆய்வு மையத்தின் (ASI) அதிகார வரம்பின் கீழ் 08 மத்திய பாதுகாக்கப்பட்ட நினைவுச்சின்னங்கள்/தளங்கள் உள்ளன.*

*இந்த மத்திய பாதுகாக்கப்பட்ட நினைவுச்சின்னங் கள்/தளங்களைப் பாதுகாத்தல் மற்றும் பராமரித்தல் என்பது ஒரு தொடர்ச்சியான செயல்முறையாகும், மேலும் வளங்களின் தேவை மற்றும் கிடைக்கும் தன்மைக்கு ஏற்ப மேற்கொள்ளப்படுகிறது.*

*அனைத்து நினைவுச் சின்னங்களும் நல்ல நிலையில் உள்ளன. இந்த 08 நினைவுச்சின்னங்கள்/தளங்களைப் பாதுகாத்தல் மற்றும் பராமரிப்பதற்காக ஏற்படும் செலவின விவரங்கள் கொடுக்கப்பட்டுள்ளன.*

*இதன்படி*

*1. மேல்பாடி சோழீஸ்வரா கோவில் பராமரிப்பு பாதுகாப்புக்காக ஆண்டு வாரியாக செலவழித்த பணம் விபரம் முறையே 2020-21ல் ரூ. 2,866,99, 2021-22ல் ரூ.1,390, 2022-23ல் ரூ.13,34,703, 2023-24ல் ரூ.20,95,515, 2024-25ல் ரூ.2,26,349. 2025-ல் தற்போது வரை ரூ.1,82,087.*

*2. மேல்பாடி சோமநாதர் சுவாமி கோவில் பராமரிப்பு பாதுகாப்புக்காக ஆண்டு வாரியாக செலவழித்த பணம் விபரம் முறையே ரூ.1,66,784, ரூ.3,05,317, ரூ.17,72,155, ரூ.8,07,660, ரூ.2,41,759, 2025-ல் தற்போது வரை ரூ.3,76,410.*

*3. வள்ளிமலை சுப்பிரமணிய சுவாமி கோவில் பராமரிப்பு பாதுகாப்புக்காக ஆண்டு வாரியாக செலவழித்த பணம் விபரம் முறையே ரூ.1,42,627, ரூ.1,79,407, ரூ.1,97,243, ரூ.2,01,872, ரூ.2,23,929, 2025ல் தற்போது வரை ரூ.1,88,537.*

*4. வள்ளிமலை குன்றில் இருக்கும் ஜைன சிற்பங்கள் மற்றும் கல்வெட்டுகள் பராமரிப்பு பாதுகாப்புக்காக ஆண்டு வாரியாக செலவழித்த பணம் விபரம் ரூ.52,392, ரூ.69,926, ரூ.2,77,260.*

*5. வேலூர் கோட்டை பராமரிப்பு பாதுகாப்புக்காக ஆண்டு வாரியாக செலவழித்த பணம் விபரம் முறையே ரூ.7,35,824, ரூ.72,87,064, ரூ.1,15,77,456, ரூ.1,01,19,285, ரூ.83,78, 975, தற்போது வரை ரூ.67,80,075.*

*6. வேலூர் கோட்டையில் உள்ள ஜலகண்டேஸ்வர் கோவில் பராமரிப்பு பாதுகாப்புக்காக ஆண்டு வாரியாக செலவழித்த பணம் விபரம் முறையே ரூ.1,909,29, ரூ.26,76,655, ரூ.4,406,52, ரூ.24,42,032, ரூ.6,38,176, 2025ல் தற்போது வரை ரூ.67,80,075.*

*7. வேலூர் கோட்டையில் உள்ள பழைய மசூதி பராமரிப்பு பாதுகாப்புக்காக ஆண்டு வாரியாக செலவழித்த பணம் விபரம் முறையே ரூ.85,612, ரூ.2,68,129, ரூ.2,02,043, ரூ.1,41,760, ரூ. 2,75,180, 2025ல் தற்போது வரை ரூ.1,72,194.*

*8. எருக்கம்பட்டுவில் உள்ள ரங்கநாதசுவாமி கோவில் பராமரிப்பு பாதுகாப்புக்காக ஆண்டு வாரியாக செலவழித்த பணம் விபரம் முறையே ரூ.1,22, 022, ரூ.4,378, ரூ. 70,167, ரூ.7,28,029, ரூ.2,25,940, 2025ல் தற்போது வரை ரூ.1,63,260.*

*மேலும் 2021-22ஆம் ஆண்டு வேலூர் கோட்டையில் விஞ்ஞான பூர்வமான புனரமைப்பு மற்றும் பராமரிப்பு பணிக்காக ரூ. 26,09,871 செலவழிக்கப்பட்டது. 2023-24ஆம் ஆண்டு மேல்பாடி சோமநாதர் சுவாமி கோவில் விஞ்ஞான பூர்வமான புனரமைப்பு மற்றும் பராமரிப்பு பணிக்காக ரூ. 9,30,362 செலவழிக்கப்பட்டது.*

*உலக பாரம்பரிய நினைவுச் சின்னமாக அறிவிக்கப்படும் எந்தவொரு தளமும் முதலில் உலக பாரம்பரிய மாநாட்டை செயல்படுத்துவதற்கான செயல்பாட்டு வழிகாட்டுதல்களின்படி குறிப்பிடப்பட்டுள்ள சிறந்த உலகளாவிய மதிப்புகள் மற்றும் நம்பகத்தன்மை அளவுகோலின் அடிப்படையில் உலக பாரம்பரியத்தின் தற்காலிக பட்டியலில் சேர்க்கப்பட வேண்டும். தற்போது வரை, வேலூர் கோட்டையை தற்காலிக பட்டியலில் சேர்க்க எந்த திட்டமும் பெறப்படவில்லை.*

*தேசிய முக்கியத்துவம் வாய்ந்த பாதுகாக்கப்பட்ட நினைவுச்சின்னங்களுக்கான பாரம்பரியத்தை ஏற்றுக்கொள் 2.0 திட்டம், தனியார்/ பொதுத்துறை நிறுவனங்கள் மற்றும் அரசு சாரா நிறுவனங்கள்/ அறக்கட்டளைகள்/ சங்கங்கள் போன்றவற்றுடன் ஈடுபடுவதற்கான கட்டமைப்பை உருவாக்கவும்,பார்வையாளர்களின் அனுபவத்தை மேம்படுத்தவும், அவற்றை பார்வையாளர்களுக்கு ஏற்றதாக மாற்றவும் பாதுகாக்கப்பட்ட நினைவுச்சின்னங் களில் வசதிகளை உருவாக்க/வழங்கவும் 4.9.2023 அன்று தொடங்கப்பட்டது.*

*அதன்படி இன்றுவரை, மொத்தம் 29 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் நிறைவேற்றப் பட்டுள்ளன.*

*இவ்வாறு அமைச்சர் தனது பதிலில் தெரிவித்துள்ளார்.*





பல்லாவரம் சட்டமன்றத் தொகுதி தாம்பரம் மாநகராட்சி 19 வது வார்டு கங்காதரன் தெருவில் டிட்வா புயலால் தொடர்ந்து பெய்து வரும் கனமழையினால் மின்மாற்றி (டிரான்ஸ்பார்மர் ) சரிந்து சாலையில் விழுந்து இதனால் மின்தடை ஏற்பட்ட தகவல் அறிந்து இ.கருணாநிதி எம்.எல்.ஏ. விரைந்து சென்று ஆய்வு செய்து மின் துறை அதிகாரிகளை வரவைத்து உடனடியாக மின் மாற்றியை சரி செய்து மின்சாரம் கிடைக்க வழிவகை செய்யுமாறு கேட்டுக் கொண்டார்.



கடம்பத்தூர் மத்திய ஒன்றிய திமுக சார்பில் இளைஞர் எழுச்சி நாளை முன்னிட்டு மாவட்டச் செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ., வி.ஜி.ராஜேந்திரன் எம்.எல்.ஏ ஆகியோர் ஆலோசனைபடி செஞ்சி கிராமத்தில் ஒன்றிய கழக பொறுப்பாளர் பிரகாஷ் ஞானஒளி தலைமையில் எழை எளியோருக்கு இனிப்பு உணவு மாநில விவசாய அணி இணை செயலாளர் ஆர்.டி.இ.ஆதிசேசன் வழங்கினார். இதில் கழக நிர்வாகிகள் உடனிருந்தனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### கவிஞர் முடியரசன்
### டிசம்பர் 3 (1998)



**திராவிட இயக்கத்தின் முன்னோடிக் கவிஞர்களில் ஒருவர்.**

**கழக இலக்கிய அணியின் தலைவராகப் பணியாற்றியவர்.**

**“1940க்குப் பின்னால் திராவிட இயக்கத்தின் சார்பில் நாற்பதுக்கும் மேற்பட்ட இதழ்களில் கொள்கை முழக்கம் செய்தவர். அதிலும் குறிப்பாக முரசொலியிலும் முத்தாரத்திலும் அவர் கவிதை இடம்பெறாத நாளே இருக்க முடியாது” எனத் தலைவர் கலைஞரால் நினைவு கூரப்பட்டவர்.**

**தமது மூத்த வழித்தோன்றல் இவர்தான் என்று புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்களால் பாராட்டப்பட்டவர்.**

**தலைமைக் கழகச் சார்பில் “கலைஞர் விருது” பெற்றவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**